**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**வார பாடசாலை**

| | | |
|---|---|---|
| **செயலட்டை 25** | **பாடம்:- வணிகக்கல்வி** | **தரம்:13** |

**தயாரிப்பு:- S. A. S. டிலக்சனி (BBA)**
**இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்**

**வாரம் 03**
**11.10.2021-17.10..2021**

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of

## வணிகமும் வணிகப் பின்னணியும்

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. மனிதத் தேவைகள் மனித விருப்பங்கள் என்பதை வரையறுத்து அவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளை அட்டவணை மூலம் சுட்டிக்காட்டுக.
2. பொருட்களும் சேவைகளும் என்பதனை வரையறுத்து அவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.
3. கட்புலனாகாத உற்பத்தி அல்லது சேவைகளின் தன்மைகள் நான்கினை குறிப்பிடுக.
4. பாவனை அடிப்படையில் பண்டங்களை வகைபடுத்துக.
5. கடை பொருட்கள் ஒப்பிடப்படும் இரு முறைகளும் யாவை?
6. சேவைகள் என்பதை வரையறுத்து உதாரணம் தருக.
7. சந்தையில் தொழிற்படும் கொள்வனவாளர் விற்பனையாளர்களின் தன்மை அடிப்படையில் சந்தையை வகைப்படுத்துக.
8. வணிகம் ஒன்றில் காணக்கூடிய முக்கியமான சில பண்புகளை குறிப்பிடுக.
9. வணிகத்தின் உண்மையான வெற்றியானது எவ்வாறான காரணங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதை குறிப்பிடுக.
10. பணத்தின் வளர்ச்சி கட்டத்தினை சுருக்கமாக விளக்குக.
11. இலத்திரனியல் வர்த்தகம், இலத்திரனியல் வணிகம் என்பதால் கருதப்படுவது யாது?
12. வணிகம் வகைப்படுத்தப்படும் இரு பிரதான வகைகளையும் பாய்ச்சல் கோட்டு வரைபடத்தின் மூலமாக விளக்குக.

13. உற்பத்தி அடிப்படையில் வணிகத்தை வரைபட உதவியுடன்வகைப்படுத்தி காட்டுக.

14. இன்றைய வணிக துறையானது பல்வேறு புதிய போக்குகளை கொண்டதாகவும் புதிய மாற்றங்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது. வணிக துறையில் ஏற்பட்டுள்ள புதிய போக்குகள் ஐந்திணை குறிப்பிடுக.
15. உற்பத்தியினை துறை அடிப்படையில் வகைபடுத்துக.
16. இலங்கை பொருளாதாரத்தில் சேவை துறையில் செல்வாக்கு செலுத்தக்கூடிய காரணிகளின் ஐந்திணை வரிசைப்படுத்துக.
17. இலங்கையில் சேவை துறையுடன் ஒப்பிடும்போது கைத்தொழில் துறையானது பின்னடைவான நிலையில் காணப்படுகின்றது . கைத்தொழில் துறையின் பின்னடைவுக்கான காரணங்கள் ஐந்திணை முன்வைக்க.
18. பின்வரும் தரப்பினர் வணிகம் ஒன்றில் அக்கறை கொள்வதற்கான காரணங்களையும் செல்வாக்குச் செலுத்துவதற்கான காரணங்களையும் தனித்தனியே அட்டவணைப்படுத்து
    - உரிமையாளர்
    - முகாமையாளர்
    - ஊழியர்கள்
    - வாடிக்கையாளர்
    - வழங்குநர்
    - நிதி நிறுவனங்கள்
    - போட்டியாளர்
    - அரசு
    - மக்கள்
19. வணிகத்தின் வளர்ச்சி கட்டத்தினை சுருக்கமாக விளக்குக.
20. அண்மைக் காலங்களில் சேவை துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகமான பங்களிப்பை வழங்குகின்றது இதற்கான காரணங்கள் சிலவற்றை முன்வைக்க.